இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்)

2. அறிவிப்புகள்.

(அ) விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு மௌன அஞ்சலி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளின் நினைவாக இன்று நாடு முழுவதிலும் இரண்டு நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்படுகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

10.58 மணிக்கு, மணி ஒலி ஒலித்தபின் எழுந்து நிற்கவேண்டும். இராணுவத்தினரின் முதல் குழல் ஒலியும், நீத்தார் அஞ்சலி குழல் ஒலி வீரவணக்கமும் (last post) முடிந்தபின் பதினொரு மணி முதல் பதினொரு மணி இரண்டு நிமிடம் வரை இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்றபடியே அஞ்சலி செலுத்தப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, இன்று முக்கியமான தினமாக இருப்பதாலும் தீண்டாமை ஒழிப்பு நாளாக அறிவித்திருப்பதாலும் அவையை 10.30 மணிக்கு ஒத்தி வைத்து மீண்டும் 11 மணிக்குக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே அலுவல் ஆய்வுக் குழுவிலே இதுபற்றி முடிவு எடுத்தோம் இங்கே வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவிலே மாற்றம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு முதல்வர் அவர்களும் மற்றவர்களும் தீண்டாமை ஒழிப்பு நாளானதால் பிரமாணம் எடுக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்வது நல்லது என்றும், தேவைதான் என்றும் என்னிடம் வந்து பேசினார்கள். அப்படியென்றால் 10-45-க்கு ஒத்திவைத்து 11-15-க்கு வந்துவிடலாம்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: அவையிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று சர்வகட்சித் தலைவர்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே சொன்னார்கள். அவர்களைக் கேட்டாமல் முடிவு எடுப்பதா?

விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு மௌன அஞ்சலி. 229

திரு. எல். இளையபெருமாள்: இங்கேயே கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டு முடிவு எடுக்கவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். நான் அரசையும் எதிர்க்கட்சிகளையும் கேட்டுக் கொ கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நாம் அங்கே போகலாம் என்றுதான் சொன்னோம். ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் இங்கேயே வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்திருப்பதுபற்றிச் சொன்னார்கள்.

திரு. சு. பாலன்: தலைவர்கள் வந்தவுடன் முடிவு செய்ய லாம்.

3. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

கல்ராயன் மலைப் பகுதியில் நீர்விழ்ச்சியிலிருந்து மின் உற்பத்தி

*வினா எண். 10!—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது பணித் துவக்கப்படும்?

(இ) அதற்கு ஆகும் உத்தேசச் செலவுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ), (ஆ) மற்றும் (இ): தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் மின்வாரியத்தால் ஆராயப்படுகின்றன. ஆய்வுக்குப்பின் விரிவான அறிக்கை, திட்ட மதிப்பீடு ஆகியவை தயாரிக்கப்படும்.

திரு. சோ. கலிதீர்த்தான்: பேரவைத் தலைவரவர்களே, மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கின்ற இந்தத் தருணத்திலே இந்தத் திட்டத்தை விரிவாகச் செயல்படுத்தினால் மிகவும் நல்ல தொரு திட்டமாக இருக்கும் என்பதைக் கருதி, இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே நம்முடைய பற்றாக்குறையைப் பார்க்கிறபொழுது இந்தப்